### இயாகப்பர் பொது நிருபம் 1:19

எனக்கு மிகவும் பிரியமான சகோதரரே, இதை நீங்கள் அறிந்திருக் கிறீர்கள். எந்த மனிதனும் கேட்கிறதுக்குத் தீவிரமாயிருக்கக்கடவான்; பேசுகிறதற்கும் கோபிக்கிறதற்குமோ தாமதம் பண்ணக்கடவான். (பழ. 17;27.)

### அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 11:28

அதற்கு அவர்: அப்படியானாலும், சர்வேசுரனுடைய வாக்கியத்தைக்கேட்டு, அதை அநுசரிக்கிறவர்கள் பாக்கியவான்களென்று திருவுளம் பற்றினார். ௸ 28. தேவ வாக்கியத்தைக் கேட்டு அநுசரிக்கிறவர்கள் பாக்கியவான்களென்று சேசுநாதர் சுவாமி இங்கே சொல்லியிருக்கிறதினாலே, தேவ வாக்கியத்தை எல்லாரையும்விட உத்தமமாய்க் கேட்டு அநுசரித்துவந்த (லூக்.1:48) பரமநாயகி, எல்லாரிலும் பாக்கியவதி யென்று தன்னாலே விளங்குகிறது. அத்தோடு அவள் தேவதாயாகவும் இருப்பதால் இருவகையிலும் எல்லாரையும்விடப் பாக்கியவதியானாள் என்பதற்குச் சந்தேகமில்லை.

### இயாகப்பர் பொது நிருபம் 1:22

நீங்கள் வாக்கியப்படி செய்கிறவர்களாயிருங்கள். ஆனால் உங்களையே மோசம்போக்கி (வாக்கியத்தைக்) கேட்கிறவர்களாய் மாத்திரம் இருக்க வேண்டாம். (மத். 7:21; உரோ. 2:13.)

### எரேமியாஸ் ஆகமம் 33:3

நம்மை நோக்கி அபயமிடு; நாம் உனக்குக் காதுகொடுப்போம்; நீ அறியாத பெரியனவும் நிச்சயமு மான சில விஷயங்களை உனக்கு அறிவிப்போம்.

### அருளப்பர் முதல் நிருபம் 5:14

நாம் அவருடைய சித்தத்தின்படி எதெதைக் கேட்டாலும், நமக்கு அவர் செவிகொடுக்கிறாரென்பதே நமக்கு அவர்மேலுள்ள நம்பிக்கையாகும்.

### எரேமியாஸ் ஆகமம் 29:12

நீங்கள் நம்மை மன்றாடித் திரும்ப வருவீர்கள்; நீங்கள் நம்மை வேண்டுவீர்கள்; நாம் உங்கள் மன்றாட்டைக் கேட்டருளுவோம்.

பழமொழியாகமம் 16:20

வார்த்தையில் கதித்தவன் நன்மையைக் கண்டுபிடிப்பான்; ஆண்டவரில் நம்பிக்கையாயிருக் கிறவனே பாக்கியவானாம்.

சங்கீதங்கள் 116:1-2

சகல ஷஜாதிகளே! கர்த்தரைப் புகழுங்கள்; சகல ஷஜாதிகளே! அவரை ஸ்துதியுங்கள். ஏனெனில் அவருடைய தயா பம் நமது பேரில் ஸ்திரமானதன்றி யும், கர்த்தருடைய உண்மை என்றென் றைக்கும் நிலைத்திருக்கும்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 7:24

ஆகையால் என்னுடைய இவ் வார்த்தைகளைக் கேட்டு, இவைகளை அனுசரிக்கிற எவனும் கற்பாறையின் மேல் தன் வீட்டைக் கட்டி எழுப்பின விவேகமுள்ள மனுஷனுக்கு ஒப்பாவான். (லூக். 6:48; உரோ . 2:13; இயா . 1:22.)

பிலிப்பியர் 4:9

நீங்கள் என்னிடத்தில் எவைகளைக் கற்றும், பெற்றும், கேட்டும், கண்டுமிருக்கிறீர்களோ, அவைகளை யே செய்யுங்கள். அப்போது சமாதா னக் கடவுள் உங்களோடிருப்பார்.

அருளப்பர் முதல் நிருபம் 5:15

நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று அறிந்திருக்கிறோம்; அவரிடத்தில் நாம் கேட்கிற மன்றாட்டுகளை அடைகிறோ மென்றும் அறிந்திருக்கிறோம்.

சங்கீதங்கள் 18:6

அது வானத்தின் முனையி லிருந்து புறப்பட்டு மறு முனை வரைக்கும் சென்று ஓடுகிறது; அதின் வெப்பத்திற்கு ஒருவனும் மறைகிற தில்லை (லூக். 24:46).

காட்சியாகமம் 3:20

இதோ, நான் வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். எவனாவது என் குரலைக் கேட்டுக் கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடு போஷஜனம்பண்ணுவேன். என்னோடு அவனும் போஷஜனம் பண்ணுவான்.

பழமொழியாகமம் 10:17

புத்திமதியை அனுசரிப்பவன் சீவிய பாதையிலே நடக்கிறான்; கண்டனைகளைக் கைநெகிழ்பவனே அலைந்து திரிகிறான்.

உரோமாபுரியார் 1 10:17

ஆதலால் விசுவாசமானது கேள்வியால் வரும்; கேள்வியோ, கிறீஸ்துநாதருடைய வாக்கியத்தால் ஆகிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 16:25

நடுராத்திரியில் சின்னப்பரும், சீலாவும் ஷெஜபஞ்செய்து சர்வேசுரனை ஸ்துதித்தார்கள். சிறையிலிருந்தவர்களும் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

சங்கீதங்கள் 5:3

ஏனெனில் நான் உம்மை நோக்கி வேண்டிக்கொள்வேன்; (நீரோவெனில்,) கர்த்தாவே காலை நேரத்தில் என் குரற் சத்தத்தைக் கேட்டருளுவீர்.

மலாக்கியா ஆகமம் 2:2

நீங்கள் செவிகொடாவிடின், நமது நாமத்தை மகிமைப்படுத்து வான் வேண்டி, (நமது ஆக்ஞாப னைக்கு) இருதயகதமாய்க் கவனஞ் செலுத்தாவிடில், நாம் உங்கள்பேரில் வறுமையை அனுப்புவோம்; நீங்கள் ஆசீர்வதித்ததை நாம் சபிப்போம்; (ஆம், எம் வார்த்தைதனை) உங்கள் இருதயத்தில் பதிய வையாததால் நாம் அவைகளைச் சபிப்போம் என்கிறார் சேனைகளின் ஆண்டவர் (சூலவி.26:14; உபா. 28:15).

பழமொழியாகமம் 6:20

என் மகனே! உன் பிதாவின் கற்பனையை அநுசரி; உன் மாதாவின் கட்டளையையுங் கைநெகிழாதே.

உபாகமம் 13:4

நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரானவரை மாத்திரம் பின்பற்றி அவருக்குப் பயந்தவர்களுமாய் அவருடைய கற்பனைகளை அநுசரிக்கிற வர்களுமாய் அவருடைய வாக் கியத்திற்குச் செவிகொடுக்கிறவர் களுமாய் அவருக்கு மாத்திரமே ஊழியஞ் செய்து அவரை அண்டிக் கொள்ளக் கடவீர்கள்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 18:15

மேலும் உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்திருப்பா னாகில், நீ போய், நீயும் அவனுந் தனித் திருக்கையில் அவனைக் கடிந்துகொள். அவன் உனக்குக் காது கொடுத்தால் உன் சகோதரனை ஆதாயமாக்கிக்கொள் வாய். (லூக். 17:3: லேவி. 19:17; சர்வப். 19:13; இயா . 5:19, 20.)

சங்கீதங்கள் 34:15

அவர்களோவெனில், எனக்கு விரோதமாகச் சந்தோஷப்பட்டு கூட்டங் கூடி எனக்குப் பொல்லாப் புச் செய்தார்கள்; அப்படி செய் வதற்கு அவர்களுக்கு காரணமென்ன வென்று அறியாமலிருந்தேன்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 4:4

அதற்கு அவர் மாறுத்தாரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, சர்வேசுரனுடைய வாயினின்று புறப்படுகிற எந்த வாக்கியத்தினாலும் பிழைக்கிறானென்று எழுதப்பட்டிருக்கிறது என்றார். (உபாக. 8:3. லூக். 4:4.)

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 12:3

ஏனென்றால் நீங்கள் இருளிலே சொன்னவைகள் வெளிச்சத்திலே சொல் லப்படும்; நீங்கள் அறைகளிலே காதுக் குள் பேசினது வீடுகளின் மேலே பிரசங் கிக்கப்படும்.

கலாத்தியர் 3:5

உங்களுக்கு இஸ்பிரீத்துவைக் கொடுத்து, உங்கள் மத்தியில் அற்புதங் களை நடத்துகிறவர் அவைகளை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைப்பற்றி யோ, அல்லது விசுவாசத்தைக் கேட்ட தைப்பற்றியோ எதைப்பற்றி நடத்தி வருகிறார்?